நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 01 ம் நாள் திங்கள்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு.419/2026**

**IN**

**சி.சி.820/2019**

சந்திரமோகன்,
த/பெ.ரெங்கசாமி, ... மனுதாரர்/ எதிரி

/எதிரிடை/

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
மல்லி காவல் நிலையம்.
குற்ற எண்.121/2018 ..எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு கடந்த 26.05.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, 26.05.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 01.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கோபிகிருஷ்ணன், B.A. LLB, அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி MBA., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று 01.06.2026 இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்/எதிரி தரப்பில் BNSS பிரிவு 480 ன் கீழ் பிணைகோரி பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அரசு தரப்பின் சுருக்கம் –

இவ்வழக்கு கடந்த 05.09.2018 ம் தேதி மாலை 04.00 மணிக்கு வாதியும், மதியழகன் என்பவர் திருவில்லிபுத்தூர் டூ சிவகாசி கிழமேல் மெயின் ரோட்டில் மல்லி பஜாருக்கு மேற்க்கே உள்ள ஆலமரத்தின் அருகில் அவருக்கு சொந்தமான வெள்ளாடுகளை மேய்த்து கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரிகள் TN 07 AF 4192 TVS VICTOR glx என்ற இருசக்கர வாகனத்தில் வைத்துக் கொண்டு வெள்ளாடுகளை திருடிச் சென்ற குற்றத்திற்காக எதிரி மீது மல்லி காவல் நிலையத்தில் குற்ற எண்.121/2018 ன்படி சட்டப்பிரிவு 379 இதச–வின் கீழ் வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பின் சுருக்கம்

எதிரி கடந்த 24.05.2026ம் தேதி கைது செய்யப்பட்டு விருதுநகர் மாவட்ட திருவில்லிபுத்தூர் கிளை சிறையில் சிறைவாசியாக இருந்து வருவதாகவும், மனுதாரருக்கும், அரசு வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்கும் பட்சத்தில் நீதிமன்ற நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகவும், மனுதாரர் தன்னை பிணையில் விடுவிக்கக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

4. அரசு தரப்பு எதிருரை

அரசு தரப்பில் எதிரி 24.05.2026ம் தேதி கைது செய்யப்பட்டு, விருதுநகர் மாவட்ட திருவில்லிபுத்தூர் கிளை சிறையில் விசாரணை சிறைவாசியாக இருந்து வருகிறார் என்றும், மேற்படி எதிரிக்கு பிணை வழங்கினால் மீண்டும் இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும் எழுத்துமூல ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மனுதாரர் தரப்பில் எதிரி குற்றமற்றவர் என்றும், வழக்கிற்கும், அவருக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றும் கூறி அவரை பிணையில் விடுமாறு வேண்டப்பட்டது.

6. மனுதாரர் தரப்பில் பிணை வழங்கக்கோரி தாக்கல் செய்துள்ள இந்த பிணை மனுவை அனுமதிப்பதா? வேண்டாமா? என்பதே தீர்வு செய்ய வேண்டிய பிரச்சனை ஆகும்.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலணை செய்து பார்க்கப்பட்டது. எதிரிக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு கடந்த 24.05.2026 அன்று அது நிறைவேற்றப்பட்டு எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, கடந்த 24.05.2026ம் தேதியிலிருந்து நீதிமன்றக் காவலில் இருந்து வருவதை கருத்திற் கொண்டும், எதிரி நீதிமன்ற நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியளித்ததைக் கருத்திற் கொண்டும், இவ்வழக்கின் தன்மையையும், குற்றத்தின் தன்மையையும் மற்றும் இதர சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டும் எதிரிக்கு நிபந்தனைகளுடன் பிணை வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

1) மனுதாரர்/எதிரி தனக்காக இரண்டு ஜாமீன்தாரர்களுடன் சேர்ந்து தலா

ரூ10,000/–க்கு பிணை பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

2) மனுதாரர்/எதிரி சிறையில் இருந்து வெளி வந்த நாள் முதல் மல்லி காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு ஆஜராகி 7 நாட்கள் தொடர்ந்து கையெழுத்து செய்து வர வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

3) மனுதாரர்/எதிரி மீண்டும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடாமல் காவல் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

4) மனுதாரர்/எதிரி காவலிலிருந்து வெளிவந்ததற்கு பின்னிட்டு சாட்சிகளை அச்சுறுத்தவோ, சாட்சியங்களை கலைக்கவோ முற்படக்கூடாது.

5) மனுதாரர்/எதிரி இந்த வழக்கு முடியும் வரை எங்கும் தப்பி செல்லக்கூடாது.

6). முடிவாக இம்மனுவானது மனுதாரருக்கு நிபந்தனைகளின் பேரில் பிணை வழங்கி அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் இன்று 01.06.2026ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்.2
திருவில்லிபுத்தூர்.